அடுத்து சவக்கிடங்குக்கு அனுப்பப்பட்ட பிறகு உயிர் பெற்று வருவதைச் சொன்னார்கள். என் அனுபவத்தில் சொல்ல முடியும். என்னுடைய பாட்டியார் இறந்து 8 மணி நேரத்திற்குப் பிறகு சுடுகாட்டிற்குக் கொண்டு போகிற நேரத்தில் உயிர் வந்தது. அப்படி என் வருகிறது என்பதைச் சிறந்த டாக்டர்களை வைத்து ஆராய்ச்சி நடத்துவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சில பேர்களுக்கு உயிர் நீங்கியதற்கான அடையாளங்கள் அத்தனையும் காணப்பட்டு, பரிசோதனை செய்கிறபோதும் இறந்துவிட்டதாக முடிவு எடுக்கப்பட்டு மறுபடியும் சில நேரம் கழித்து அவர்களுக்கு உயிர்ப்புச் சக்தி திரும்பி வந்துவிடுகிற நிலையில் இறந்தவர்கள் எழுந்துவிடுவதும் உண்டு. எழுந்தவர்களை எழுந்துவிடாமல் இருக்க அடித்துக் கொன்றும் இருக்கிறார்கள். இதில் இந்து பிணம், முஸ்லீம் பிணம், கிறிஸ்துவ பிணம் என்கின்ற வேறுபாடு இல்லை. மருத்துவ மனையில் இறந்து, விஞ்ஞான அடிப்படையில் பரிசோதனை செய்து இறந்து விட்டதாகத் தீர்மானிக்கப்பட்ட எல்லா சவங்களுமே இப்படி உயிர்ப்புச் சக்தியைப் பெற்றுத் திரும்புவது என்கிற நிலை இல்லை.

வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு பெண் இறந்து, அந்தச் சவத்தைக் கோரிப் பெறுவார் யாரும் இல்லாத காரணத்தால் நகராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டு அந்தப் பெண் புதைக்கப்பட்டதற்கும் அங்கே சவக் கிடங்கு இல்லையென்பதற்கும் சம்பந்தம் இல்லை. அது வேறு. இது வேறு.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, கோவை நகராட்சி மருத்துவ மனை மிக முக்கியமான மருத்துவ மனையாயிற்றே. அங்கே நவீன சவக் கிடங்கினை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கும் விரைவில் கட்ட வேண்டுமென்று அரசு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சவக் கிடங்குகளுக்கு இவ்வளவு டிமாண்டு இருக்கிறதே!

கிருதுமால் நதி.

*272 வினா.—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் உதயமாகி இராமநாதபுரம் மாவட்டம் வழியாகச் செல்லும் கிருதுமால் நதியின் இரு கரைகளையும் பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

1975 மார்ச் 11]

திரு. கு. திருப்பதி : கிருதுமால் நதி என்பது மதுரையில் ஓடுகின்ற சாக்கடைக்கு வேறு பெயர். அதை விரைவில் செயல் படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மதுரையில் எப்படி ஓடிவருகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. மதுரையில் இருப்பதைப் பற்றி ஆய்வில் இருப்பதாகத் தெரிவித்தேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த கிருதுமால் நதியின் குறுக்கே அணை கட்டவேண்டுமென்று பார்வேட் பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு. எ. ஆர். பெருமாள் அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறாரே, அதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அணை கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. நதியை ஆழப்படுத்தி, இரு கரைகளையும் பலப்படுத்த வேண்டுமென்றுதான் சொல்லி வருகிறார்கள்.

"மதுரைப்பாலம்" இரயில் நிலையத்தருகில் மேம்பாலம்.

*273 வினா.—திரு. த. சோணையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"மதுரைப்பாலம்" இரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள தத்தநேரி இருப்புப் பாதையினைக் கடந்து செல்ல மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்போது இல்லை.

கோதுமை ஒதுக்கீடு.

*274 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்பொழுது மாதந்தோறும் மத்திய அரசு ஒதுக்கும் கோதுமையின் அளவு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1975 பிப்ரவரி மாதத்திற்கு மத்திய அரசு 41,000 டன் கோதுமை ஒதுக்கீடு செய்தது. மார்ச்சு மாதத்திற்கு 51,000 டன் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஒதுக்கீடு பொது விநியோக முறையின் கீழ் விநியோகத்திற்குச் செய்யப்படுகிறது. இதைத் தவிர சென்ற இரு மாதங்களாக மாதம் 9,000 டன் கோதுமை, அரைவு ஆலைகளுக்காகத் தனியாக ஒதுக்கப்படுகிறது.